**தலைப்பு 223 – இலங்கை கடற்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் 3.1.2 அட்டவணையில் உள்ள உச்சமட்ட வருமானக் குறியீட்டுக்கு உரித்தாகிய வருமானக் கணக்கும், இலங்கை கடற்படையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 223 – இலங்கை கடற்படையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 22 ஆந் திகதி கடற்படை தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2.1 |
| | | 2. முகாமைத்துவப் பலவீனங்கள் | 2.5 |
| | | 3. ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | மனித வள முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.12 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | பொது வைப்புக் கணக்கின் குறைபாடுகள் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமை த்துவத்தில் குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறை சேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்காமை / தாமதித்து சமர்ப்பித்தல் | 2.1 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | களஞ்சிய முற்பணக் கணக்கு தொடர்பாக | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற் பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல். | 2.7 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நிதியுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடம் பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.12 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 ஒக்தோபர் 18 ஆம் திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 பெறுகைச் செயன்முறையை செயற்படுத்தல்

இது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.3.1(அ) இன் பிரகாரம் அனைத்து தொடர்புடைய செலவுகள் உட்பட மொத்த கிரய மதிப்பீடு ஒன்று பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் ரூபா 142.39 மில்லியனுக்கான வழங்கல்கள் சேவைகளுக்காக மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) பிரதான பெறுகை திட்டத்தின் பிரகாரம் சப்பாத்துக்கள், தொப்பிகள், உடற்பயிற்சி ஆடைகள் ஆகிய சீருடைகள் 7,122 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது 14,954 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 4.37 மில்லியனுக்கான சீருடைகள் 14 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வெப்பெல்ட் (ஒலிவ் கிரீன்) களின் தேவை 527 அலகுகளாக இருந்த போதிலும் 2,250 அலகுகள் கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 1.52 மில்லியனுக்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 4.2.3 இன் பிரகாரம் விலைமனு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நாள் முதல் உரிய வழிகாட்டல் கோவையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதியில் உடன்படிக்கைகளுக்கு அணுகி பெறுகை அலுவல்களை செயற்படுத்த வேண்டுமெனினும், ரூபா 5 மில்லியன் முதல் ரூபா 100 மில்லியன் வரையான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுகை அலுவல்கள் செயற்படுத்தும் போது 16 வாரங்கள் முதல் 2 வருடங்களும் 4 மாதங்கள் வரை தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11(ஆ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலைமனுதாரர்களிடம் விலைமனுகளுக்காக பாதுகாப்பு பிணை முறி ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது 71 சந்தர்ப்பங்களில் ரூபா 257 மில்லியன் பெறுமதியான சீருடைகள், இயந்திர உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது விலைமனு பாதுகாப்பு பிணை முறி பெற்றிருக்கவில்லை.

(உ) மேற்கூறிய விடயத்திற்கு மேலதிகமாக, தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.10 இன் பிரகாரம் பண்டங்கள் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்த வேலை ஒன்றினை ஒப்பந்தக்காரரினால் பண்டங்களின் கிரயத்தில் 10 சதவீதத்தை விட குறைவில்லாத தொகையொன்று ஏற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற செயலாற்றுகை பாதுகாப்பு பிணை முறி ஒன்று சமர்ப்பிக்க வேண்டுமெனினும் 49 சந்தர்ப்பங்களில் ரூபா 172 மில்லியன் பெறுமதியான

கொள்வனவுகள் தொடர்பாக செயலாற்றுகை பாதுகாப்பு பிணை முறி பெற்றிருக்கவில்லை.

(ஊ) கடற்படையின் உத்தியோகத்தர்களுக்காக சீருடைகள் கொள்வனவு செய்யும் போது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தினால் வழங்கியிருந்த மாதிரி, விலைமனு அழைப்புப் பத்திரத்தில் காட்டப்பட்டிருந்த விவரக் குறிப்புகளுக்கு இணங்கியுள்ளது என இலங்கை நெசவு மற்றும் ஆடைகள் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை இரத்து செய்து வேறு நிறுவனமொன்றிற்கு விலைமனு வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 1,040,400 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(எ) தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 5 இலட்சத்தை விட மிகையான பண்டக் கொள்வனவுகள் தொடர்பாக முறையான உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது 178 சந்தர்ப்பங்களில் ரூபா 407 மில்லியன் பெறுமதியான சீருடைகள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் ஆகிய கொள்வனவுகள் தொடர்பாக உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ஏ) டீ ஷேட், சப்பாத்து, பொத்தம், கைஆபரணங்கள் ஆகிய துணைக் கருவி விடயங்கள் கொள்வனவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகை திட்டத்திற்கு புறம்பாக 32 கட்டளைகளின் மூலம் ரூபா 34,528,903 பெறுமதியான 54,916 சீருடை விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) வள்ளங்கள் மற்றும் கப்பல் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யும் போது பண்புசார் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மேலதிக சான்றிதழ்கள் காணப்படவில்லை என குறிப்பிட்டு ரூபா 3,023,828 தொகைக்காக குறைந்த விலை சமர்ப்பித்திருந்த விலைமனுவை இரத்துச் செய்து ரூபா 4,988,211 இற்கான இரண்டாம் குறைந்த விலைமனு சமர்ப்பித்தவருக்கு ஒப்பந்தவேலை சாட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினம், விலைமனு அழைப்பு பாத்திரத்தில் பண்புசார் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றிதழ்கள் விலைமனு உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவித்திருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) சொத்துக்களை ஆவணப்படுத்தல்

மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பாக அறிக்கையில் அடங்கியுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 19,373,586,031 தொகை மீதி, நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த ரூபா 42,782,100,263 தொகைக்கான மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. அதன் காரணமாக அம் மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### (ஆ) வாகனப் பயன்பாடு

2009 அக்தோபர் 21 திகதிய 13/2008(iii) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு மாத்தை விட மிகையான காலம் சம்பளத்துடன் அல்லது சம்பளமின்றி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் உத்தியோக பூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கு அல்லது சாரதிகளின் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு அல்லது உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிமை இல்லை. மீளாய்வாண்டின் போது இலங்கை கடற்படையினால் 25 சந்தர்ப்பங்களில் மேற்கூறிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறி உத்தியோத்தர்கள் வெளிநாடுகளில் இருக்கும்

போது பொது 268 படிவத்தில் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் பெயரை குறிப்பிட்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தியிருந்ததெனவும் அதற்காக ரூபா 7.20 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது எனவும் தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

**(இ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

(i) 1971 ஆண்டு முதல் தனதாக்கியிருந்த ரூபா 1,770 மில்லியன் தொகைக்கான 140 பழைய கப்பல்கள் மற்றும் படகுகள் இலங்கை கடற்படைக்கு சொந்தமான படகு தளங்களில் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் செயற்படாமல் காணப்பட்டதுடன் அவற்றில் 55 வள்ளங்கள் 2018 செப்தெம்பர் 30 அளவில் திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு 85 கப்பல்கள் மற்றும் படகுகள் செயற்படாமல் காணப்பட்டது. கூட்டுத்தொகை ரூபா 922 மில்லியன் பெறுமதியான இந்த கப்பல் மற்றும் படகுகளை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) 1995 மற்றும் 1996 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த ஆனால் பயன்படுத்த முடியாத நிலைமை அடைந்திருந்த ரூபா 239 மில்லியன் பெறுமதியான 101 மெஷின் துப்பாக்கிகளை பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) ரூபா 1.26 மில்லியன் பெறுமதியான கப் வண்டி ஒன்று 2 வருடங்களை விட மிகையான காலம் திருத்த வேலைகளுக்காக வட மத்திய கடற்படை வளவில் தடுத்து வைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த திருத்த வேலைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(ஈ) உரித்தாக்கப்படாத சொத்துக்கள் முறைசாரா விதமாக பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு சொந்தமான 221 கட்டிடங்கள் மற்றும் தனியார் துறையினரின் 454 ஹெக்டயர் காணி 2017 திசெம்பர் 31 திகதி வரை இலங்கை கடற்படையினால் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டதுடன் அவற்றில் உரிமையை உரித்தாக்குவதற்கு அல்லது திருப்பி ஒப்படைப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை. இலங்கை கடற்படையினரால் முறைசார் விதமாக உரித்தாக்கப்படாது தனியார் காணிகளிலுள்ள கட்டிடங்களின் அபிவிருத்திக்காக திறைசேரியின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 927.87 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.4 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்படையினால் 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 154.02 தொகை அதாவது 9.9825 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகியிருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் அது தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வேறு விதத்தில் ஏற்பாடுகளை ஒதுக்கியிருந்த சந்தர்ப்பங்கள் தவிர வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக பணம் ஏற்பாடு ஒதுக்கியிருந்த போது திணைக்களத்தினால் வேலைகள் அல்லது சேவைகள் வழங்குவதற்காக

செலவுகள் எதற்கும் மற்றும் ஈடுபாட்டு பொறுப்புக்களை ஏற்படுத்தக் கூடாது எனினும் அதற்கு முரணாக கடற்படையினால் 10 செலவு விடயங்கள் தொடர்பாக 2017 ஆண்டின் போது ரூபா 37.57 மில்லினுக்கான பொறுப்பு ஒன்று ஏற்படுத்தியிருந்தது.

(இ) 223-1-2-1-2502(12) செலவு விடயத்தின் கீழ் 133.10 அமெரிக்க டொலர் பெறுமதியான இரண்டு கடற்படை காவல் படகுகள் கொள்வனவு செய்வதற்காக 2013 மே 13 திகதி இந்திய கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று அணுகி இருந்ததுடன் அதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 3.3275 அமெரிக்க டொலர்களுக்கான பொறுப்புக்கு உரிய உள்நாட்டு பணப் பெறுமதியினை கணித்து ஒதுக்கீட்டு கணக்கில் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அது தொடர்பாக 2015, 2016 ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளுக்கான கணக்காய்வு அவதானிப்புக்களின் மூலம் சுட்டிக்காட்டிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2018 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 2017 ஆண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 149.67 மில்லியனுக்கான செலவுகள் 2018 ஆண்டிற்கான ஏற்பாடுகளில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் செலவுகளின் பெறுமதி 2017 ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) 2013 மே 13 திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியன் கடன் திட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் இலங்கை கடற்படையின் தேவைக்கு இணங்க இந்திய கடற்படை வள்ளத்தளத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த ரூபா 133 மில்லியன் டொலர் பெறுமதிக்கு சமனான சுமார் ரூபா 19,950 மில்லியன் பெறுமதியான 02 கடற்படை படகுகள் மீளாய்வாண்டின் போது இலங்கை கடற்படைக்கு கிடைத்திருந்தது. இந்த காவல் படகுகளில் சிறு அளவிலான 02 ஹெலிகொப்டர்கள் நிறுத்தி வைப்பதற்கான இடம் ஒதுக்கியிருந்த போதிலும், அதற்கு பொருத்தமான சிறு அளவுகளிலான ஹெலிகொப்டர்கள் அவதானிப்பு வானூர்திகள் கொள்வனவு செய்திருக்காமையால் கப்பலின் உச்ச அளவு வினைத்திறனை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளது.

(ஆ) மேற்கு கடற்படையின் கட்டளை கொமன்டோ அத்தியட்சகர் கப்பல் கட்டுமிடத்தினால் திருத்த வேலைகளுக்கா வெளி நிறுவனங்களுக்கு வழங்கி 2017 திசெம்பர் 31 திகதிக்கு 08 மாதங்கள் முதல் 22 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 1.76 மில்லியன் தொகைக்கான வள்ளங்களின் பகுதிகள் மற்றும் அளவை உபகரணங்கள் திருத்த வேலைகள் பூர்த்தி செய்த பின்னர் திருப்பப் பெற்றிருக்கவில்லை.

## 2.6 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 38,556.03 | 36,692.88 | 1,863.15 | 4.83 |
| | மூலதன | 4,778.50 | 3,248.78 | 1,529.73 | 32.01 |
| | **மொத்தம்** | **43,334.53** | **39.941.66** | **3,392.88** | **7.83** |
| 2014 | மீண்டுவரும் | 48,432.62 | 48,343.49 | 89.14 | 0.18 |
| | மூலதன | 5,886.62 | 5,826.64 | 59.97 | 1.02 |
| | **மொத்தம்** | **54,319.24** | **54,170.13** | **149.11** | **0.27** |
| 2015 | மீண்டுவரும் | 48,187.80 | 48,025.63 | 162.17 | 0.34 |
| | மூலதன | 9,854.58 | 9,016.80 | 837.78 | 8.50 |
| | **மொத்தம்** | **58,042.38** | **57,042.43** | **999.95** | **1.72** |
| 2016 | மீண்டுவரும் | 48,730.50 | 46,874.21 | 1,856.29 | 3.81 |
| | மூலதன | 13,194.37 | 9,860.41 | 3,333.97 | 25.27 |
| | **மொத்தம்** | **61,924.87** | **56,734.62** | **5,190.26** | **8.38** |
| 2017 | மீண்டுவரும் | 48,570.86 | 47,709.02 | 861.84 | 1.77 |
| | மூலதன | 9,142.56 | 7,332.51 | 1,810.04 | 19.80 |
| | **மொத்தம்** | **57,713.42** | **55,041.53** | **2,671.88** | **4.63** |

மீளாய்வாண்டின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

உரிய முறையில் விடயங்களை கண்டறிந்த பின்னர் தேவையான நிதி ஏற்பாடுகள் மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அல்லது முகாமைத்துவத்தினால் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிச்சயிக்கப்பட்ட செயலாற்றல் இலக்கினை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயற்படாமையினால் ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22301 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 550.00 | 532.90 | 500.00 | 510.28 | 910.00 | 323.54 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் கடன் மீதிகள் தவிர ஒரு வருடத்தினை மிகைத்த காலப் பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24.68 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 23.10 மில்லியன் தொகை 05 வருடங்களை விட மிகையான காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. அது அறவிடப்படாமல் காணப்படும் கடன் தொகையில் 93.6 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்தியது.

**2.8 களஞ்சிய முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22302 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 575.00 | 513.19 | 595.00 | 646.04 | 380.00 | 60.79 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கூற்றின் பிரகாரம் 2017 ஆரம்ப வருமான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் தொகை எனினும், அரசாங்க வருமான மதிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 100 மில்லியனாகும். அதன் பிரகாரம் ரூபா 5 மில்லியனுக்கான வித்தியாசம் ஒன்றினைக் காட்டியது.

(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கிற்கான வருமானக் கூற்றின் பிரகாரம் ஆண்டிற்கான தேறிய வருமானம் ரூபா 112.53 மில்லியன் தொகை எனினும், ஞாபகர்த்த வருமானக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு தேறிய வருமானம் ரூபா 118.58 மில்லியன்

தொகை என காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 6.05 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(இ) நிதிப் பிரமாணம் 136 இன் பிரகாரம் 126,000 கி.கிராம் வோட்டர் ஜெல் கொள்வனவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும் 135,000 கி.கிராம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கையை மிகைத்து 9,000 கி.கிராம் மிகையாக கொள்வனவு செய்திருந்ததுடன் அதற்காக ரூபா 4.18 மில்லியன் தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜுலை 11 திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்தத் துணைக் கட்டுநிதியை தீர்க்கப்பட வேண்டுமெனினும், 36 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 15.84 மில்லியன் தொகைக்கான நிமித்த துணைக் கட்டுநிதி கருமம் முடிவடைந்து 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சு அளவு தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) நி.பி. 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த துணைக் கட்டுநிதி ஒன்றில் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டுள்ள மீதி அந்த கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அப்பால் தாமதிக்கக் கூடாது எனினும், இலங்கை கடற்படையினால் 07 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 321,746 தொகைக்கான நிமித்த துணைக் கட்டுநிதி 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

## 2.10 பொது வைப்புக் கணக்கு

இலங்கை கடற்படையின் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 271.56 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 02 வருட காலத்தை கடந்துள்ள வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் அல்லது திருப்பி செலுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 63.15 மில்லியனிற்கான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஆ) பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ரூபா 13.17 மில்லியன் அரச நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்ததுடன் அப் பணம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் 1½ வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரை காலப்பகுதி ஒன்று பூராகவும் இலங்கை கடற்படையில் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### 2.11.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகைப் பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சீருடை பதவியணி

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிலையான | 43,923 | 39,340 | 4,583 | - |
| (ii) | தன்னார்வ | 5,500 | 4,256 | 1,244 | - |
| (iii) | விஷேட முறை | 2,000 | 7,241 | - | 5,241 |
| (iv) | நிலையான கடல்சார் உபசேவை | - | 257 | - | - |
| (v) | சுயவிருப்பு கடல்சார் உபசேவை | - | 119 | - | - |
| | மொத்தம் | 51,423 | 51,273 | 5,827 | 5,241 |

சிவில் பதவியணி

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 08 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 03 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 132 | 68 | 64 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,768 | 1,502 | 266 |
| (v) | ஏனைய(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 195 | 195 | - |
| | மொத்தம் | 2,113 | 1,776 | 337 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்படையின் உத்தியோகத்தர்கள் 97 பேர்கள் மற்றும் பதவியணியினர் 3748 பேர்கள் வெளிநிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2009 யுத்த வெற்றியின் பின்னர் கடற்படை உத்தியோகத்தர்கள்/ மாலுமிகள் எதிர்கால தொழில் பயன்படுத்துவது தொடர்பாக திட்டமொன்று செயற்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) கடற்படை விடுமுறை விடுதிகள் மற்றும் விழா மண்டபம் தொடர்பாக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை கடற்படையினால் கடற்படை 6 கட்டளை அகங்களின் 07 விடுமுறை விடுதிகள் மற்றும் 05 விழா மண்டபங்களின் கடற்படையினரால் நலனோம்பு விடயங்களுக்காக பராமரிக்கப்படுவதுடன் இந்த விடுமுறை விடுதிகளுக்காக 2016 ஜனவரி மாதம் முதல் இலங்கை கடற்படையின் கட்டளையின் பிரகாரம் இலாபம் ஈட்டும் நோக்கமின்றி நடாத்திச் செல்லப்படுகின்றனது. அரச நிதியம் அல்லாத நிதியம் என கணித்து இவற்றின் விடயங்கள் நடாத்தப்படுவதுடன் கிடைக்கக் கூடிய வருமானங்கள் அரசின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது.

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த விடுமுறை விடுதிகள் மற்றும் விழா மண்டபங்களுக்காக 27 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவியினர் 448 பேர் இணைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. குறிப்பிட்ட விடுமுறை விடுதிகள் மற்றும் விழா மண்டபங்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் மற்றும் பயன்படுத்திய உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளுக்காக திரண்ட நிதியத்தின் கீழுள்ள ஏற்பாடுகளின் மூலம் பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு அல்லது உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.12 அரச பணத்திற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களினால் பிணை வைக்காமை**

நிதிப்பிரமாணம் 880(ii) இன் பிரகாரம் ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு நாளில் தனது தனிப்பட்ட பொறுப்பில் காணப்படும் பணத்தின் அளவு அந்த உத்தியோகத்தரின் மூன்று மாத சம்பளத்தை மிகைக்குமிடத்து அந்த உத்தியோகத்தர் பிணை வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், மூன்று மாத சம்பளத்தை மிகைக்காது என அமைச்சின் செயலாளர் திருப்தி அடைந்தால் மாத்திரம் அவரினால் குறிப்பிட்ட உத்தியோகத்தரை பிணை வைப்பிலிருந்து விடுவிக்க முடியுமாக இருந்ததுடன் அனைத்து பணத்திற்கும் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களும் பிணை வைக்க வேண்டும். அவ்வாறு இன்றி 54 சந்தர்ப்பங்களில் ரூபா 35.28 மில்லியன் பணத்தொகையொன்று 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.